வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண் 008 / அ1/ 2021 நாள் 02 -2-2022

பொருள் பள்ளிக் கல்வித் துறை - அமைச்சுப் பணி - வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்கள் பணிவரன்முறை, தகுதிகாண்பருவம், மாவட்ட நடைமுறைநூல் தேர்ச்சி பெறாதவர்கள் விவரம் கோருதம் சார்பு.

.........

வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு / நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தொடர்பாக பணிவரன்முறை, தகுதிகாண்பருவம் ஆணை பெறாதவர்கள் உரிய கருத்துருக்களை கீழ்க்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி ஒரு அசல் மற்றும் 2 நகல்கள் கொண்ட கருத்துருக்கள் தயார் செய்து அசல் பணிப்பதிவேட்டுடன் ஒப்படைக்குமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

| வ. எண் | கருத்துருக்கள் ஒப்படைக்க வேண்டிய நாள் | ஒன்றியத்தின் பெயர் | நேரம் |
|---|---|---|---|
| 1 | 07-02-2022 | வேலூர் | காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை |
| | | கணியம்பாடி | பிற்பகல் 02.00 மணி முதல் 05.00 மணி வரை |
| 2 | 08-02-2022 | அணைக்கட்டு | காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை |
| | | காட்பாடி | பிற்பகல் 02.00 மணி முதல் 05.00 மணி வரை |
| 3 | 10-02-2022 | கே வி குப்பம் | காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை |
| | | குடியாத்தம் | பிற்பகல் 02.00 மணி முதல் 05.00 மணி வரை |
| 4 | 11-02-2022 | பேர்ணாம்பட்டு | காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை |

மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின்படி பணிவரன்முறை, தகுதிகாண்பருவம் கருத்துருக்கள் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தில் அ1 பிரிவு எழுத்தரிடம் சார்ந்த பணியாளர் நேரடியாக ஒப்படைக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

மேலும் கருத்துருவுடன் இணைப்பில் காணும் படிவம் பூர்த்தி செய்யப்பட்டு தனியாக கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு முக்கிய குறிப்பு மற்றும்
(பணிவரன்முறை படிவம் புதியது
கருணைஅடிப்படை நியமனம் பெற்றவர்களுக்கு மட்டும்)

ஒப்பம் (க. முனுசாமி)
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர்
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்
3. அனைத்து அரசு /நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமைஆசிரியர்கள்

முக்கிய குறிப்பு

1. பணிவரன்முறை கருத்துரு அனுப்புவோர் கவனத்திற்கு

1. இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளராக பணியில் சேர்ந்த ஓராண்டு கழித்து கருத்துருக்கள் அனுப்புபவர்களாக இருப்பின் காலதாமதத்திற்கான சார்ந்த பணியாளரின் விளக்கம் மற்றும் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரின் விளக்கம் அதற்கான ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவர்கள் பணிவரன்முறை படிவம் புதியது (இணைக்கப்பட்டுள்ளது)

2. தகுதிகாண் பருவம் கருத்துரு அனுப்புவோர் கவனத்திற்கு

இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்யப்பட்டு அரசாணை , பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் ஆணை , முதன்மைக் கல்வி அலுவலரின் ஆணை மற்றும் மாவட்டக் கல்விஅலுவலரின் ஆணை கிடைக்கப்பெற்று (இரண்டு ஆண்டு பணிக்காலம் முடிக்காதவர்கள் நீங்கலாக ) உடன் தகுதிகாண் பருவம் கருத்துருக்கள் அனுப்புபவர்களாக இருப்பின் காலதாமதத்திற்கான சார்ந்த பணியாளரின் விளக்கம் மற்றும் சார்ந்த பள்ளி தலைமை ஆசிரியரின் விளக்கம் அதற்கான ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

3. அனைத்து அரசு / நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கவனத்திற்கு

தங்கள் பள்ளியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர்கள் மாவட்ட நடைமுறை நூல் தேர்ச்சி பெற்ற விவரம் கீழ்க்காணும் படிவத்தில் பூர்த்தி செய்து 07-02-2022 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக அ1 பிரிவு எழுத்தரிடம் நேரில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | பணியாளர் பெயர் | பதவி | பணிபுரியும் பள்ளி | பிறந்த தேதி | முதன் முதலில் பணியில் சேர்ந்தநாள் | மாவட்ட நடைமுறை நூல் தேர்ச்சி பெற்ற மாதம் / வருடம் மற்றும் பதிவு எண் | அரசிதழ் எண் மற்றும் மாதம் /வருடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

தலைமை ஆசிரியர் கையொப்பம்